# LOYOLA COLLEGE (AUTONOMOUS), CHENNAI – 600 034

**B.A.** DEGREE EXAMINATION – **TAMIL LITERATURE**

FIRST SEMESTER – **NOVEMBER 2017**

**17/16UTL1MC01 – RELIGIOUS AND ETHICAL LITERATURE**

Date: 06-11-2017 Dept. No. Max. : 100 Marks
Time: 01:00-04:00

**பகுதி - அ (10X2=20 மதிப்பெண்கள்)**

**விடையொன்றுக்கு 20 சொற்களில் எல்லா வினாக்களுக்கும் விடையளிக்க.**

01. எவருடையப் பாடல்கள் 'தேவாரம்' என பெயர் பெறுகின்றன?
02. இராமலிங்கர், இறைவனை எவ்வாறெல்லாம் விளிக்கின்றார்?
03. ஆழ்வார் பெயர்கள் நான்கினை எழுதுக.
04. எங்கு, எப்பொழுது, எவ்வாறு நான்முகன் தோன்றினான்?
05. எச்.ஏ. கிருட்டிணப்பிள்ளையின் மனம் எவ்வாறு உழலுகின்றது?
06. 'படிக்கப் படிப்பெனக்குப் பகராய் பராபரமே' என்று குணங்குடியார் கூறக் காரணம் யாது?
07. 'நல்லறிவு நாளுந்தலைப்படுவர்' என நாலடியார் கூறக் காரணம் யாது?
08. அமிழ்தின் இனிது எது?
09. தேசம், தையல் குறித்துப் பாரதியார் யாது கூறுகிறார்?
10. 'நல்லாரால் எல்லார்க்கும் நலம்' என ஔவையார் கூறும் மூதுரையினைக் குறிப்பிடுக.

**பகுதி - ஆ (5X7=35 மதிப்பெண்கள்)**

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு ஒன்றரைப்பக்க அளவில் விடையளிக்க.**

11. அச்சோப்பதிகத்தின் தனித்தன்மைகள் யாவை?
12. மாயவன் தன்னை மணம் செய்வதாக, நாச்சியார் கண்டக் கனவினை விளக்குக.
13. ஜெருசேலம் நகரச்சிறப்பினை விவரி.
14. கல்வியின் பெருமைகளாக நாலடியார் கூறுவன யாவை?
15. இனியவை நாற்பதில் இடம்பெறும் நீதிகளைச் சுட்டுக.
16. பாரதியின் புலமை, பழமையைப் புதிய ஆத்திசூடி வழி நிறுவுக.
17. மாணிக்கவாசகருக்குப் பிடித்த பத்தினை விளக்குக.

**பகுதி - இ (3X15=45 மதிப்பெண்கள்)**

**மூன்றுபக்க அளவில் விடையளிக்க.**

18. 'இன்னம் பாலிக்குமோ இப்பிறவியே' என நாவுக்கரசர் கூறும் காரணங்களைத் தொகுத்துரைக்க.

**( அல்லது )**

இராமலிங்கரின் அருட்தன்மைளை விவரிக்க.

19. திருவேங்கடமுடையானிடம், குலசேகராழ்வார் வேண்டும் வேண்டுதல்களை விளக்குக.

**( அல்லது )**

பராபரக்கண்ணியில் குணங்குடியார் இறைவனிடம் இறைஞ்சும் கருத்துகளை விவரிக்க.

20. மாந்தரின் மன இருளைப் போக்கும் திரிகடுகத்தின் சிறப்பியல்புகளைத் தெளிவுறுத்துக.

**( அல்லது )**

மூதுரை மூலம் அறியவரும் அறநெறிக் கருத்துகளைத் தொகுத்துரைக்க.

★★★★★★★